மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 124/2017c/w 18/2018

பெயர் : சுகன்யா
சாட்சி – வா.சா–2 நாள்: 09.02.2026

---

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)**

1. எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள முகவரி எனது அப்பாவின் முகவரி என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 5 ஆண்டுகள் ஆகிறது. அ.வ.எண்.124/2017 ல் வாதிகள் பழனிச்சாமி மற்றும் சுப்பையன் எங்கள் பூமிக்கு மேல்புறம் உள்ள பூமிதாரர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் பழனிச்சாமி அளித்த சாட்சிய விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். நான் அவரது சாட்சியத்தை படித்துப் பார்த்துள்ளேன்.

2. அ.வ.எண்.18/2018 ல் வாதிக்கு தாவா 2 ம் அயிட்ட சொத்தில் 3 1/2 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வா.சா.1 பழனிச்சாமி சுப்பிரமணியத்திற்கு 3 1/2 செண்ட் பாத்தியம் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அவ்வாறு அவர் சொல்லியுள்ளது தவறானது ஆகும். எங்கள் பூமிக்கு செல்வதற்கு பிஏபி வாய்க்கால் மேல் பாலம் கட்டியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பாலத்திற்கு வடபுறம் 3 1/2 செண்டை அ.வ.எண்.124/2017 வழக்கின் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பாலத்திற்கு தென்புறம் உள்ள 3 1/2 செண்டில் எனது தகப்பனார் பெரியசாமிக்கு 3 செண்டும், வாத்தியார் நடராஜனுக்கு 1/2 செண்டும் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

3. 27.10.1937, 05.10.1946, 16.10.1975 ஆகிய பத்திரங்களை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். பிஏபி வாய்க்கால் 1985 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாய்க்கால் உருவாக்கப்பட்ட பின்னர் தான் வாய்க்காலுக்கு கிழபுறம் 7 செண்ட் பூமி தனியாக பிரிந்தது என்றால் சரிதான். 27.10.1937, 05.10.1946, 16.10.1975 ஆகிய பத்திரங்கள்

பிஏபி வாய்க்கால் உருவாவதற்கு முன்பு உள்ள ஆவணங்கள் என்பதால் அதில் 7 செண்ட் பற்றி குறிப்பிடப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. அ.வ.எண்.18/2018 ல் வாதிக்கு தாவா 2 ம் அயிட்ட சொத்து முழுமையும் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாய்காலுக்காக மொத்தம் எவ்வளவு பூமி எடுத்தார்கள் என்றால் ரோட்டிற்கு மேல்புறம் உள்ள சுமார் 1.96 ஏக்கரில் சுமார் 40 செண்ட் எடுத்தார்கள். 2006 ம் ஆண்டு எனது தகப்பனார் தரப்பினராக இருந்து ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் வாய்காலுக்கு எடுத்தது போக சுமார் 1.80 ஏக்கர் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே நான் சொல்வது போல் 40 செண்ட் வாய்காலுக்காக எடுத்திருக்க வாய்பில்லை என்றும், சொன்னால் சரியல்ல.

5. வாய்கால் எடுத்த பின்னர்தான் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். எங்களது சுவாதீனத்தில் எவ்வளவு பூமி உள்ளது என்று அளந்து பார்த்து பாகம் பிரிக்கவில்லை என்றால் சரிதான். (சாட்சி தானாக முன் வந்து அளந்து பார்த்தில் 1.40 ஏக்கர் இருந்ததாக சொல்கிறார்.) அளந்து பார்த்தில் 1.40 ஏக்கர் தான் இருந்தது என்ற போது பாகப்பிரிவினை பத்திரத்தில் வாய்காலுக்கு எடுத்தது போக சுமார் 1.80 ஏக்கர் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தவறானது என்றால் சரிதான். க.ச.62/7 காலையில் எங்களுக்கு தனியாக இல்லாமல் நடராஜன் என்பவருடன் கூட்டாக தான் உள்ளது என்றால் சரிதான்.

6. எங்கள் குடும்பத்திற்கு க.ச.62/7 காலையில் பாத்தியப்பட்ட 2.06 ஏக்கரில் ரோட்டிற்கு கிழபுறம் உள்ள 10 செண்டை ஏற்கனவே கிரையம் கொடுத்து விட்டோம் என்றால் சரிதான். எங்கள் பூமி மற்றும் நடராஜனின் பூமி ஆகியவை அளந்து பார்த்தால் தான் யாருக்கு எவ்வளவு பாத்தியம் என்று சொல்லமுடியும் என்றால் சரிதான். அளந்து பார்க்காமல் வாய்காலுக்கு கிழபுறம் உள்ள 7 செண்டை எங்களுக்கு மட்டுமே பாத்தியம் என்றால் எங்களால் சொல்லமுடியாது என்றால் சரியல்ல.

7. க.ச.62/7 காலையில் மேல்கோட்டில் மழை காலத்தில் கூடுதல் நீர் செல்வதற்காக பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த நீர் பள்ளபாளையம் செல்கிறது

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிஏபி வாய்காலில் ஆண்டிற்கு 6 மாதம், மாதத்திற்கு 3 முதல் 5 நாட்களுக்கு தண்ணீர் செல்லும் என்றால் சரிதான். தற்போது வாய்கால் தூர் வாறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரும் 10ம் தேதி தண்ணீர் திறக்க உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் பிஏபி வாய்காலில் ஒரு நாள் கூட தண்ணீர் வந்ததில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பூமிகளை நேரில் பார்ப்பது இல்லை என்பதால் அது பற்றிய விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியவில்லை என்றால் சரியல்ல.

8. நாங்கள் க.ச.62/7 காலையில் வசிக்கவில்லை என்றும், அது மானாவாரி பூமி என்றும் சொன்னால் சரிதான். எனது அப்பா மட்டும் தான் சென்று பார்ப்பார் என்றால் சரிதான். அ.வ.எண்.124/2017ன் 1ம் வாதி பழனிச்சாமி பிஏபி வாய்காலில் 15 அடி அகலத்தில் இருந்த பாலத்தை 40 அடி அகலத்தில் அவர்தான் பாலம் கட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பழனிச்சாமி க.ச.62/7 காலை பூமி வழியாக தான் அவர் பூமிக்கு அனைத்து வாகனங்களையும் எடுத்து சென்று அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

9. நாங்கள் தென்வடல் ரோட்டில் இருந்து மேற்கே வாய்காலை கடந்து செல்வதற்கு பிஏபி வாய்கால் நிர்வகிக்கும் அமைப்பிடம் பாலம் கட்டுவதற்கு அனுமதி வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் கட்டியுள்ள வண்டிப்பாலத்தின் அகலம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. நாங்கள் 5 மீட்டர் அகலத்தில் வண்டிப்பதை அமைக்க மட்டுமே அனுமதி வாங்கியுள்ளோம் என்றும் ஆனால் அதற்கும் அதிகமாக 20 அடி அகலத்திற்கு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல.

10. அ.வ.எண்.124/2017 ல் வாதிகள் நீதிமன்றத்தில் இருந்து ஆணையரை அழைத்துச்சென்று காண்பித்து ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடங்களை பார்த்துள்ளேன். நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தில் தடம் என்று சொல்லும் இடத்தில் சுமார் 30 அடி உயரத்திற்கு தென்னை மரங்களும், தென்மரத்திற்கு கிழபுறமாக தென்மேற்கு மூலையில் கிழமேலாக ஒரு

மாட்டு சாலையும் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தென்னை மரங்கள் வைத்து சுமார் 25 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான்.

11. அ.வ.எண்.124/2017 வழக்கின் வாதிகள் சொல்வது போல் க.ச.62/1சி , 62/2 காலைகளில் எந்த காலத்திலும் தடம் இருந்ததில்லை என்றால் சரியல்ல. சட்டவிரோதமாக கம்பிவேலி அமைத்தாரகள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் கம்பி வேலி அமைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. கம்பி வேலி அமைத்தது சம்மந்தமாக புகார் அளித்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு பற்றி விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாதும் என்றும், எனது அப்பா சொல்லிதான் தெரியும் என்றும், சொன்னால் சரிதான்.

12. பழனிச்சாமி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதராவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.124/2017 வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், அ.வ.எண்.18/2018 வழக்கு அவ்வழக்கின் வாதிகள் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றும், சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.09 18:15:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.